**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.42/19** P.W. 5

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. செந்தமிழ் | Father's / Husband Name | . சதாசிவம் |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |
| Date | :01.08.2019 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 01.08.2019.

**முதல் விசாரணை**.

நான் செம்பகராயநல்லூரில் கீழக்காட்டில் குடியிருந்து வருகிறேன். நான் மலேசியாவில் சமையல் வேலை செய்கிறேன். சம்பவம் நடந்தபொழுது நான் ஊரில் இருந்தேன். அசா.1 பன்னீர்செல்வத்தை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அசா.1னிக்கும் எதிரிகளுக்கும் நடந்த சம்பவம் குறித்து எனக்கு எதவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வேண்டுகோளுகிணஙக சாட்சி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**.

நான் போலிசார் விசாரணையின்போது 11.9.2010ம் தேதி அசா.1 பன்னீர்செல்வம் வீட்டிற்கு எதிர்புறம் உள்ள சனிகிழமை சந்தையில் நான் நின்று கொண்டிருந்தபோது அப்போது செண்பகராமன், குஞ்சி என்ற வெற்றிவேல், சக்திவேல் ஆகிய மூவரும் பகல் 11.45 மணியளவில் தங்கள் கைகளில் கடப்பாரை, மண்வெட்டி, கட்டையுடன் பன்னீர்செல்வம் வீட்டிற்கு தென்புறம் உள்ள காம்பவுண்ட் சுவரை உடைக்கும் பொறுட்டு அங்கு வந்து நின்றபோது அசா.1 பன்னீர்செல்வம் அவர்களை பார்த்து ஏன் என் வீட்டு காம்பவண்ட் சுவரை உடைக்கபோகிறீர்கள் என்று கேட்டார் என்றும் அப்போது எதிரி குஞ்சி என்ற வெற்றிவேல் அசா.1ஐ பார்த்து காமகுரோத வார்தைகள் சொல்லி திட்டி போற பாதையை அடைத்து வைக்கிறாயே நாயே என்று திட்டி கீழேப்போட்டிருந்த இரும்பு கடப்பாரையை எடுத்து இத்தோடு ஒழிந்துபோடா என்று சொல்லி பன்னீர்செல்வத்தின் தலையில் அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியுள்ளார் என்றும் அப்பொழுது மற்ற இரண்டு எதிரிகளான செண்பராமன், சக்திவேல் ஆகிய இருவரும் அசா.1ஐ பார்த்து அசிங்கமாக திட்டியும் செண்பகராமன் வலது பக்க கையிலும் சக்திவேல் வலது பக்க காலிலும் உருட்டு கட்டையால் அடித்தார்கள் என்றும் இதை பார்த்த அசா.1 பன்னீர்செல்வத்தின் மனைவி சத்தம்போட்டார் என்றும் நானும் சோமசுந்தரம் மகன் பன்னீர்செலவமும், ராகவன் ஆகியோர்கள் சென்று பார்த்தபோது அசா.1னின் தலையில் ரத்த காயத்துடன் கீழே மயங்கி கிடந்தார் என்றும் எதிரிகள் இரும்பு கடப்பரை, மண்வெட்டி, கட்டை ஆகியவற்றை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார்கள் என்றும் காயம்பட்ட பன்னீர்செல்வத்தை சிகிச்சைக்காக நாங்கள் நாகை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு

ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் தூரத்து பங்காளி என்பதால் அவர்களை இந்த வழக்கில் இருந்து காப்பாற்ற பொய் சாட்சியம் முன்வைக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிதரப்புக் குறுக்கு விசாரணை**.

. காயம்பட்ட பன்னீர்செல்வம் எனது தூரத்து உறவான பெரியப்பா வீட்டு அக்கா மகன் ஆகும்.

**மறுவிசாரணை இல்லை**.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**S.C.42/19** P.W. 6

Deposition of witness for Prosecution:

| | | | | |
|---|---|---|---|---|
| Name | :திரு. சுப்பிரமணியன் | Father's / Husband Name | . முருகையன் | |
| Village | : | Taluk | : | |
| Religion | : | Age | : | |
| Date | :01.08.2019 | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 01.08.2019.

**முதல் விசாரணை**.

நான் செண்பகராநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் மளிகை கடைவைத்துள்ளேன். நான் சனிகிழமை சந்தைக்கு பக்கத்தில் மளிகை கடைவைத்து வியாபாரம் செய்து வருகிறேன். அசா.1ஐ தெரியும். எதிரிகள் மூவரையும் தெரியும். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வேண்டுகோளுகிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**.

போலிசார் விசாரணையின்போது 11.9.2010ம் தேதி மதியம் 11.45 மணியளவில் நான் கடையில் வியாபாரம் செய்து கொண்டிருந்தேன் என்றும் அப்போது அசா.1னின் மனைவி விஜயா என்பவர் சத்தம்போட்டதாகவும் அந்த சத்தத்தை கேட்ட நான் எனது மனைவியை வியாபாரம் பார்க்க சொல்லிவிட்டு சம்பவ இடத்திற்கு ஓடினேன் என்றும் அப்போது நடுகாட்டில் வசிக்கும் வடிவேல் என்பவரின் மகன்கள் குஞ்சி என்ற வெற்றிவேல் தனது கையில் இரும்பு கடப்பாரையுடனும் செண்பராமன் சக்திவேல் ஆகியோர்கள் தங்கள் கையில் கட்டையுடன் ஓடிவந்தார்கள் என்றும் பன்னீர்செல்வத்தின் வீட்டின் தெற்குபுறம் உள்ள மதில் சுவர் அருகில் அசா.1 மயங்கி தலைக்காயத்துடன் கிடந்தார் என்றும் அவருக்கு இடது பக்க தலையில் பலமாக அடிப்பட்டு வீக்கமாக இருந்தது என்றும் அவரை என்ன என்று கேட்டபோது எதிரிகள் ஆயுதத்தோடு பன்னீர்செல்வத்தின் மதில் சுவற்றை இடிக்கவந்ததாகவும் அப்போது எதிரிகள் அசிங்கமாக பன்னீர்செல்வத்தை பேசி கடப்பாரை மற்றும் கட்டையால் அவரை தாக்கி காயம் ஏற்படுத்தியதாகவும் காயம்பட்ட பன்னீர்செல்வத்தை அவரது மனைவி விஜயாவும் சிகிச்சைக்காக நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு போக சொன்னதாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும் எதிரிகள் எனக்கு தம்பி முறை என்பதால் அவர்களை இந்த வழக்கில்

இருந்து காப்பாற்ற அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் முன்வைக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிதரப்புக் குறுக்கு விசாரணை**.

காயம்பட்ட பன்னீர்செல்வம் எனது அண்ணன் வடிவேல் கவுண்டரின் மருமகன் ஆகும்.

**மறுவிசாரணை இல்லை**.